1st April 1965]

கனம் திரு. வெ. ராமைய்யா : என்னை மட்டுமல்ல, எல்லா உணவுப் பொருள்களும் நியாயமான விலைக்குக் கிடைக்க ஏற்பாடுகள் செய்கிறோம். பற்றாக்குறையாக இருப்பவற்றை பிற மாநிலங்களிலிருந்து பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

திரு. சா. கணேசன் : கோதுமை பற்றி கனம் அமைச்சர் குறிப்பிட்டார்கள். சிறப்பாக சில குறிப்பிட்டவர்களுக்கு, குறிப்பிட்ட வியாதியுள்ளவர்களுக்கு, கோதுமை உணவு இன்றியமையாதது, அதுவும் சம்பா கோதுமைதான் நம்முடைய முறையில் பக்குவமான உணவாகச் செய்து சாப்பிடச் சாத்தியமாக இருக்கிறது. அந்த வகைக் கோதுமையை வாங்கமுடியாத, உண்ண முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அது கிடைக்க வழிவகை செய்ய அரசாங்கம் முயற்சி எடுக்கிறதா, இல்லையென்றால் முயற்சிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : சம்பா கோதுமை வாங்கிக் கொடுக்கவேண்டும் என்றால், நமக்கு இருக்கும் தேவை, கிடைக்கும் வாய்ப்பு இவற்றையெல்லாம் பற்றி சிவில் சப்ளை அதிகாரிகள், குறிப்பாக விசேஷ நோயாளிகளுக்குக் கொடுக்க, தீவிர முயற்சி எடுக்க வேண்டும் என்பதில் நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. எஸ். பொன்னுசாமி நாடார் : தலைவர் அவர்களே, இப்பொழுது நாம் கையாளும் உணவு தானியக் கொள்முதல் மூலமாக இப்பொழுது இருக்கும் பற்றாக்குறை சரிகட்டிவிடுமா அல்லது இன்னும் தேவை இருக்குமா, இருக்கும் என்றால், வெளியிடங்களிலிருந்து எந்த அளவுக்கு நமக்கு வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது ராஜ்யத்திலே ஏற்பட்டிருக்கும் நிலையை உணர்ந்து செயல் படுகிறோம். லீன் பீரியடில் ஏற்படக்கூடிய சிரமங்களை தவிர்க்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஏதாவது அதிகக் கஷ்டம் ஏற்பட்டால், மத்திய சர்க்காரும் உதவி செய்யும்.

Decisions on procurement and purchase of paddy and rice

* 409 Q.—Sri V. SANKARAN :
Sri S. J. RAMASWAMI : } Will the Hon. the Minister for Food be pleased to state the details of the decisions taken at the Conference of the Union Food Minister and the Chief Ministers of States held on 20th December 1964 at New Delhi on the procurement and purchase of paddy and rice?

The Hon. Sri V. RAMAIAH : There was no such conference on 20th December 1964 at New Delhi.

திரு. வை. சங்கரன் : அந்தக் குறிப்பிட்ட தேதியில் இல்லாவிட்டாலும் கூட, கொள்முதல் (ப்ரொக்யூர்மெண்ட்) சம்பந்தமாக புது டெல்லியில் நடைபெற்ற மத்திய உணவு அமைச்சர் மற்றும் மாநில முதலமைச்சர்களின் மாநாட்டில் கொள்முதல் சம்பந்தமாக என்ன என்ன முடிவுகள் ஏற்பட்டன?

கனம் திரு. வெ. ராமையா : அப்படிப்பட்ட ஒரு மாநாடு நடைபெறவில்லை என்று நான் முதல் கேள்விக்கே பதில் சொல்லி விட்டேன். கனம் அங்கத்தினர் அந்த மாநாட்டில் ஏற்பட்ட முடிவைப்பற்றிக் கேட்டால் எப்படிச் சொல்வது ?

திரு. வை. சங்கரன் : முதல் கேள்வி 'டிஸ்ட்ரிப்யூஷன்' சம்பந்தமாக இருக்கிறது. இரண்டாவது கேள்வி 'ப்ரொக்யூர்மெண்ட்" சம்பந்தமாக இருக்கிறது. ஆகையால், தனித் தனியாக இருப்பதால், " ப்ரொக்யூர்மெண்ட் சம்பந்தமாக என்ன முடிவு எடுக்கப்பட்டது ?" என்று கேட்டேன்.

கனம் திரு. வெ. ராமையா : அப்பொழுது இருந்த நெருக்கடி நிலைமைக்குத் தகுந்த முறையில் என்ன என்ன பேசப்பட்டது என்பதைப்பற்றிய விவரம்தான் சொல்லியிருக்கிறேன்.

திரு. கோ. சி. மணி : பருப்பு விலை ஏற்றத்தின் காரணத்தால் அரசாங்கமே பருப்பு வகைகளைக் கொள்முதல் செய்து விநியோகம் செய்யப் போவதாகப் பத்திரிகையில் ஒரு செய்தி படித்தேனே அது உண்மையா ?

கனம் திரு. வெ. ராமையா : நமது ராஜ்யத்திற்குத் தேவையான பருப்பு வகைகளை மற்ற ராஜ்யத்திலிருந்து வாங்குவதற்கு அரசாங்கமே முன்வந்திருக்கிறது. அதைக் கூட்டுறவு சொஸைட்டி மூலமாக வாங்குகிறார்கள்.

புதிய அரிசி ஆலைகளுக்கு உரிமங்கள்

*410 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதிய அரிசி ஆலைகளுக்கு அனுமதி வழங்குவதில் அரசின் கொள்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : The principles governing the grant of permit are laid down in section 5 (4) of the Rice Milling Industary (Regulation) Act, 1958 and in rule 3 (2) (*a*) to (*e*) of the Rice Milling Industry (Regulation and Licensing) Rules, 1959. The permits are granted after a full complete investigation with due regard to the above statutory provisions.

திரு. எஸ். முருகையன் : 1958-ம் வருஷத்திய சட்டம் வருவதற்கு முன்பாகவே பல இடங்களில் கட்டடங்கள் கட்டி லைசென்சுக்கு மனுச் செய்திருந்தும் கூட, அது போன்ற சில மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. சட்டம் வருவதற்கு முன்பாகவே, அதற்கு மனுச் செய்துவிட்டார்கள். அதுபோன்ற மனுக்களை யாவது மீண்டும் பரிசீலனை செய்து லைசென்ஸ் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. வெ. ராமையா : ஒரு பிராந்தியத்திற்குத் தேவையான ரைஸ் மில்லை நிர்ணயம் செய்ய இப்பொழுது விதிமுறை இருக்கிறது. கட்டடம் கட்டிவிட்ட காரணத்திற்காகவே ரைஸ் மில்லுக்கு லைசென்ஸ் கொடுக்க முடியுமா என்பதெல்லாம் ஆலோ